# பள்ளிக்கல்வி ஆணையரகம், சென்னை-6

அனுப்புநர்

க.நந்தகுமார், இ.ஆ.ப.,

ஆணையர், பள்ளிக்கல்வி,

டி.பி.ஐ வளாகம்,

சென்னை – 6

பெறுநர்

1. இயக்குநர், மாநிலத் திட்ட இயக்ககம்.
2. தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம்.
3. சிறப்பு பணி அலுவலர், இல்லம் தேடிக் கல்வி.
4. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம் .
5. இயக்குநர், மெட்ரிக் பள்ளி இயக்ககம்,
6. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்.
7. இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்ககம்.
8. சார்ந்த இணை இயக்குநர்கள், பள்ளிக் கல்வி.

ந.க.எண் :59699/ பிடி1 / இ2 / 2021, நாள்: 11.04.2022

பொருள் : பள்ளிக்கல்வி - காஞ்சிபுரம் மண்டல வாரியான ஆய்வுக்கூட்டம் - 20.04.2022 மற்றும் 21.04.2022 ஆகிய தேதிகளில் நடைபெறுதல் - பள்ளிக் கல்வித் துறையின் வளர்ச்சி மற்றும் மாணவர்களின் நலன் சார்ந்த திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்தல் - இணை இயக்குநர்கள் மற்றும் இயக்குநர்கள் நியமனம் – தகவல் தெரிவித்தல் – சார்பு.

பார்வை :
1. மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள்:12.10.2021.
2. சென்னை-6, பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.59699/பிடி1/இ2/2021, நாள்.25.11.2021.

*********

அய்யா/அம்மையீர்,

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக செயல்படுத்தப்பட்டு வரும் கற்றல் மற்றும் கற்பித்தல் பணிகளை மேலும்

மேம்படுத்தும் விதமாக, அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் மாணவர்களுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, மண்டல வாரியான ஆய்வுக் கூட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அவர்கள் மற்றும் பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் அவர்களும் கலந்து கொண்டு ஆய்வு செய்ய இருக்கின்றனர்.

பார்வை 2-ல் காணும் கடிதப்படி இவ்வாய்வுக்கூட்டம் 7 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஆய்வு கூட்டம் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு மண்டலத்தில் இரண்டு நாட்கள் களப்பணி நடத்திடவும், இரண்டாம் நாள் பிற்பகுதியில் ஆய்வுக் கூட்டம் நடத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. அக்கூட்டத்தின் இரண்டு நாட்களிலும் சார்ந்த துறைத் தலைவர்கள் மற்றும் இணை இயக்குநர்கள் பள்ளி பார்வை மேற்கொள்வர். இரண்டாம் நாள் பிற்பகுதியில் மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் தலைமையில் தொடர்புடைய கள அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

ஆறாம் கட்டமாக 20.04.2022 மற்றும் 21.04.2022 அன்று சென்னையில் மண்டல வாரியான ஆய்வுக்கூட்டம் நடைபெறவுள்ளது. மண்டல வாரியான ஆய்வுக்கூட்டத்திற்கான பணிகளை மேற்கொள்ளுவதற்காக கீழ்க்காணும் இயக்குநர்கள்/இணை இயக்குநர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

<u>காஞ்சிபுரம் மண்டலம் களப்பணி மற்றும் ஆய்வுக்கூட்ட</u>
<u>நாட்கள்.20.04.2022 மற்றும் 21.04.2022</u>

| வ. எண் | மாவட்டம் | பெயர் மற்றும் பதவி<br>திரு/திருமதி | பெயர் மற்றும் பதவி<br>(இணை இயக்குநர்கள் நிலையில்)<br>திரு/திருமதி |
|---|---|---|---|
| 1 | சென்னை | க.நந்தகுமார், இ.ஆ.ப,<br>ஆணையர்,<br>பள்ளிக் கல்வி,<br>சென்னை-6. | 1. முனைவர்.ஆர்.பாஸ்கர சேதுபதி<br>இணை இயக்குநர்-III<br>மாநிலத் திட்ட இயக்ககம்<br>சமக்ரா சிக் ஷா<br>சென்னை-6<br><br>2. கே.செல்வகுமார்,<br>இணை இயக்குநர்(இடைநிலை),<br>அரசு தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை-6. |

| | | | |
|---|---|---|---|
| 2 | திருப்பத்தூர் | க.இளம்பகவத் இ.ஆ.ப.,<br>சிறப்பு பணி அலுவலர்,<br>இல்லம் தேடிக் கல்வி | 1. முனைவர்.வை.குமார்<br>இணை இயக்குநர் (பயிற்சி),<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>சென்னை–6.<br>2. எம்.வாசு,<br>இணை இயக்குநர்,<br>மாநில திட்ட இயக்ககம்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,<br>சென்னை–6. |
| 3 | திருவள்ளூர் | முனைவர்.க.அறிவொளி,<br>இயக்குநர்,<br>தொடக்கக் கல்வி இயக்ககம்,<br>சென்னை–6. | 1. க.ஸ்ரீதேவி,<br>இணை இயக்குநர் (பாடத்திட்டம்)<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>சென்னை–6<br>2. ச.கோபிதாஸ்,<br>இணை இயக்குநர் (இடைநிலைக் கல்வி),<br>பள்ளிக் கல்வி ஆணையரகம்,<br>சென்னை–6. |
| 4 | வேலூர் | முனைவர்.அ.கருப்பசாமி,<br>இயக்குநர்,<br>மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்ககம்,<br>சென்னை–6. | 1. சி.அமுதவல்லி,<br>இணை இயக்குநர் (நாட்டுநலப் பணித்திட்டம்),<br>பள்ளிக் கல்வி ஆணையரகம்,<br>சென்னை–6.<br>2. வெ.ஜெயக்குமார்,<br>இணை இயக்குநர் (தொழிற் கல்வி),<br>பள்ளிக் கல்வி ஆணையரகம்,<br>சென்னை–6. |
| 5 | காஞ்சிபுரம் | ந.லதா,<br>இயக்குநர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>சென்னை–6 | 1. ச.உமா,<br>இணை இயக்குநர்–II,<br>மாநிலத் திட்ட இயக்ககம்,<br>சமக்ரா சிக் ஷா,<br>சென்னை–6<br>2. எம்.இராமசாமி,<br>இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி),<br>பள்ளிக் கல்வி ஆணையரகம்,<br>சென்னை–6 |

| | | | |
|---|---|---|---|
| 6 | இராணிப்பேட்டை | முனைவர்.சி.உஷாராணி,<br>உறுப்பினர்,<br>ஆசிரியர் தேர்வு வாரியம்,<br>சென்னை–6. | 1. சி.செல்வராஜ்,<br>இணை இயக்குநர்,<br>கள்ளர் சீரமைப்பு,<br>மதுரை.<br><br>2. நா.ஆனந்தி,<br>இணை இயக்குநர்,<br>மெட்ரிக் பள்ளி இயக்ககம்,<br>சென்னை–6. |

மேற்கண்ட அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங்களை 20.04.2022 மற்றும் 21.04.2022 ஆகிய இரு நாட்களிலும் ஆய்வு செய்து 21.04.2022 அன்று பிற்பகல் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆக்கப் பூர்வமான கருத்துக்களை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை முதன்மைக் கல்வி அலுவலர், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கு அல்லது ஏதாவது ஒரு கல்லூரி/பள்ளி கூட்டரங்கில் ஆய்வுக்கூட்டத்தினை நடத்திடுமாறும் ஆய்வுக்கூட்டத்திற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளையும் மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

காஞ்சிபுரம் மண்டலத்தை உள்ளடக்கிய ஆய்வுக்கூட்டத்தில் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள பயிற்சி வட்டார கல்வி அலுவலர்கள், மாவட்ட உதவித்திட்ட அலுவலர்கள், மாவட்ட உதவித்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முதன்மைக் கல்வி அலுவலர்களின் நேர்முக உதவியாளர்கள், (இடைநிலை மற்றும் மேல்நிலை) கலந்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக் கல்வி ஆணையருக்காக

நகல் :

11/4/22

1. அரசு முதன்மைச் செயலாளர்,
   பள்ளிக் கல்வித் துறை,
   தலைமைச் செயலகம், சென்னை–9. (தகவலுக்காக அனுப்பப்படுகிறது)
2. மாவட்ட ஆட்சித்தலைவர்,
   சென்னை. (முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)
3. முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
   (சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர்)
4. நேர்முக உதவியாளர்,
   மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அலுவலகம்,
   தலைமைச் செயலகம், சென்னை–9. (தகவலுக்காக அனுப்பப்படுகிறது)